NALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

வெளிநாட்டுப் பிரயாணம்
திறமையான சேவைக்கும், நம்பிக்கைக்கும், செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
Tele: 24791, 24886

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

ரெலிபோன்
ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe Vehicle Parking
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
Tele: 24791, 24886

மலர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி மீ 29 உ. வியாழக்கிழமை ஹிஜ்றி 1406 ஷவ்வா பிறை 03 (12.06 1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY இதழ்: 176



மண்டைதீவில் குரூரமாகக் கொல்லப்பட்ட குருநகர் வாசிகள் அனைவரது சடலங்களும் பெட்டிக்குள் வைக்கப்பட்டு இறுதி அடக்கத்திற்காக நிரையாகக் குழிக்குள் வைக்கப்பட்டிருக்கும் - நெஞ்சை உருக வைக்கும் - காட்சி. (உ)

## திருமலையில் 50 பேர் மரணம்

## இரண்டு பஸ்களில் குண்டுகள் வெடித்தன

### மேலும் பலர் நிலை கவலைக்கிடம்

யாழ்ப்பாணம், ஜூன், 12

திருகோணமலையில் நேற்றுக் காலை இரண்டு இ. போ. ச. பஸ்களில் குண்டுகள் வெடித்தன.

அதன் விளைவாக பஸ்களில் பயணம் செய்த பிரயாணிகளில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்

படுகாயம் அடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இரண்டு பஸ்களும் சுக்கு நூறாகின என்ஜின் பகுதிகள் மட்டுமே சிறிது எஞ்சியிருந்தன. ஏனைய பகுதிகள் தூள் தூளாகிப் பறந்தன.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் திருகோணமலை கடற்படை முகாமின் பிரதான வாசலுக்கு சற்றுத் தள்ளி உள்துறைமுக வீதியில் நிகழ்ந்தது.

சுக்கு நூறாகிய பஸ்ஸின் சிதறுண்ட பாகங்கள் வீதியருகே உள்ள திருகோணமலை துறைமுக கடல் பகுதியில் வீசப்பட்டுக் கிடந்தன.

குண்டு வெடிப்பில் அகப்பட்ட இரண்டு பஸ்களில் ஒன்று திருமலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது

இன்னொரு பஸ் திருமலையில் இருந்து கந்தளாய் நோக்கிச் சென்று கொண்டிருந்தது

இரண்டு பஸ்களும் சுமார் 100 யார் இடைவெளியில் சென்று கொண்டிருக்கையிலேயே குண்டு வெடிப்புக்கு இலக்காகின.

முதலில் முன்னால் சென்ற கந்தளாய் பஸ்ஸில் குண்டு வெடித்தது சில நிமிட நேரத்தில் அதற்குப் பின்னால் சென்ற கொழும்பு பஸ்ஸில் குண்டு வெடித்தது.

காயமடைந்தவர்கள் ஹெலிக்கொப்டர்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## மண்டை தீவில் சூட்டுக்கு மூவர் பலி!

### 6 பேர் கைதாகினர்

வேலணை, ஜூன் 12

செவ்வாய்க் கிழமை அதிகாலை மண்டைதீவு மினி முகாமிலிருந்து குடிமனைப் பகுதியை நோக்கிச் சென்ற சிப்பாய்கள் அங்கு துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

சிப்பாய்களின் தேடுதலின்போது ஆறு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இறந்த மூவரின்பெயர் விவரம் வருமாறு:-

1. சோமசுந்தரம் சோதிநாதன் (வயது 60)
2. விசுவலிங்கம் விமலநாதன் (வயது 22)
3. அன்ரன் விஜயக்குமார், இவர்கள் மூவரும் மண்டைதீவைச் சேர்ந்தவர்கள்.

கைது செய்யப்பட்ட ஆறு இளைஞர்களின் விவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காவலூரில் ஷெல் தாக்குதல்

ஊர்காவற்துறை, ஜூன் 12

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஊர்காவற்றுறை பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட பீரங்கி ஷெல் தாக்குதல்களினால் ஊர்காவற்றுறையில் பல கட்டிடங்கள், வீடுகள் என்பன பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த தாக்குதல்களினால் ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளை அலுவலகக் கட்டிடமும் பலத்த சேதத்துக்குள்ளாகி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## வல்வை: மும்முனைத் தாக்குதல்

## 6 பேர் பலி! நாற்பது பேர் காயம்!!

### புலிகள் பதில் தாக்குதல்

கரவெட்டி, ஜூன் 12

நேற்று காலையில் வல்வெட்டித்துறையில் பொதுமக்கள வாழும் பகுதிகளை நோக்கி சுமார் ஆறு மணி நேரம் மும்முனைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வல்வெட்டித்துறை முகாம் பக்கமாக தரையிலிருந்து ஷெல் தாக்குதலும்—

கடலில் கடற்படைக் கப்பல்களில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும்—

வானத்தில் பொம்மர் விமானங்கள், ஹெலிக்கொப்டர் ஆகியவற்றிலிருந்து துப்பாக்கி வேட்டு, குண்டுவீச்சுத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

பரவலாக நடைபெற்ற இந்தத் தாக்குதல்களினால் ஆறுபேர் கொல்லப்பட்டனர். நாற்பதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

பல குடிமனைகள் தீப்பற்றி எரிந்தன, வீடுகள், ஆலயங்கள், கட்டடங்கள் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் பற்றி அறியவருவதாவது:-

நேற்று அதிகாலை சிப்பாய்கள் வல்வெட்டித்துறை முகாமை விட்டு வெளியே வர முயன்றதாகக் கூறப்படுகிறது.

அவர்களை வெளியேற விடாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதேவேளை மூன்று கப்பலகள், மூன்று பீரங்கிப் படகுகள், மூன்று பிளாஸ்ரிக் படகுகள், இரண்டு வள்ளங்கள் ஆகியவற்றில் வந்த நூற்றுக்கணக்கான கடற்படை, இராணுவப்படை சிப்பாய்கள் முகபம் பகுதியில் இறங்க முயற்சித்தனர்.

புலிகள் அவர்கள் மீதும்

4-ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மீன் பிடிக்கத் தடை!

யாழ்ப்பாணம் ஜூன் 12

யாழ் குடாநாட்டில் ஏரிகளில் மீன்பிடிப்பது இன்று முதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

இப்படி யாழ்மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்க நேற்று யாழ் அரச அதிபருக்கு அறிவித்தார்.

இத்தகவலை யாழ் செயலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

குடாநாட்டைச் சூழ்ந்த கடல்பகுதிகளில் மீன்பிடிப்பது ஏற்கனவே

(4-ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவில் கொலையுண்டோருக்கு ஆயிரக்கணக்கானோர் இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 12

மண்டைதீவுக் கடலில் நேற்று முன்தினம் படுகொடூரமாகக் கொலை செய்யப்பட்டவர்களது இறுதி ஊர்வலம் நேற்று சோகமயமாக குருநகரில் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் அழுது புலம்பிய வண்ணம் நேற்று இந்த இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைகளின் பின்னர் செவ்வாய்க்கிழமையே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

பின்னர் நேற்று அனைத்து பூதவுடல்களும் சென் ஜேம்ஸ் தேவாலயத்திற்கு கொண்டு

(4-ஆம் பக்கம் பார்க்க)

### கொட்டாஞ்சேனையில் குண்டு !

கொழும்பு ஜூன் 12

நேற்று இரவு கொழும்பு கொட்டாஞ்சேனையில் கெயிட்டி தியேட்டருக்கு அருகே ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் குண்டு ஒன்று வெடித்தது.

இக்குண்டு வெடிப்பில் ஐந்துபேர் படுகாயமடைந்தனர்.

(உ)

### மிச்சம் மிறண்



இந்த மாதம் ஒரே சாவு மாதம் தானே! பின்னை... எல்லா இடங்களிலும் சாவு சாவு எண்டு தானே சம்பவங்கள் நடக்குது

### சுபநேரம்

12 – 6 – 1986
வியாழக்கிழமை
சுபநேரம்;
7.22 முதல் 8.52 வரை
ராகுகாலம்:
1.22 முதல் 2.52வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## யாழ் நகரம் சோகமயம்

### மக்கள் மத்தியிற் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ் நகரமெங்கும் நேற்று சோகமே உருவாகக் காட்சியளித்தது.

சகலகடைகளும் மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள், வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டன.

திங்கட்கிழமை மண்டைதீவுக் கடலில் நடந்த குரூரக் கொலைச் சம்பவத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவே அவ்வாறு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

குருநகர், பாஷையூர் எங்கும் கறுப்புக்கொடிகளும், வாழை தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன.

கொலையுண்டவர்க

(4-ஆம் பக்கம் பார்க்க)

### ஆக்கபூர்வமான நடவடிக்கை இல்லையேல்

## மத்தியஸ்தத்தில் இருந்து இந்தியா விலகி விடுமாம்

### ஜே. ஆரிடம் டிக்ஸிற்

கொழும்பு, ஜூன் 12

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆக்கபூர்வமான முறையில் நடவடிக்கை எடுக்க இலங்கை அரசு தவறுமானால், இந்திய மத்தியஸ்தத்தில் இருந்து விலகிவிடும்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்தபோது மேற்கண்ட தகவலை இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் தெரிவித்ததாக அறியவருகிறது.

திரு ஜெயவர்த்தனவை திரு. டிக்ஸிற்

(1-ஆம் பக்கம் பார்க்க)

### இறுதி ஊர்வல காட்சி

நேற்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படங்களில் சில.







மரணமடைந்த போராளிகளின் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிக்கு டாக்டர்களை அனுப்புமாறு கோரிக்கை

## காயமுற்ற நிலையில் பலர்

யாழ்ப்பாணம், ஜூன் 12
- கிளிநொச்சியில் இராணுவக் கெடுபிடியினால் காயப்படுபவர்களுக்கு அவசர சிகிச்சையளிக்க உருத்திரபுரம், வட்டக்கச்சி வைத்தியசாலைகளுக்கு டாக்டர்களை அனுப்பிவைத்து உதவுங்கள்.

இப்படி கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழு யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

பணிப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஜூன் 4 முதல் குண்டு வீச்சாலும் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் மக்கள் அழிந்து கொண்டு இருக்கின்றனர்.

இராணுவக் கெடுபிடியால் ஏற்படும் உயிரிழப்புக்கள் ஒருபுறம். காயப்பட்டவர்களோ சிகிச்சை எதுவும் பெறமுடியாது துன்பப்படுவது மறுபுறம்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி இயங்க முடியாத நிலையில் உள்ளது.

உருத்திரபுரம், வட்டக்கச்சி வைத்தியசாலைகள் இயங்கக் கூடியதாக உள்ளன.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் பணியாற்ற முடியாமல் உள்ள டாக்டர்கள் உருத்திரபுரம், வட்டக்கச்சி வைத்தியசாலைகளுக்குச் சென்று கடமை புரிய பணிக்கப்பட்டால் மக்களுக்கு உதவியாக இருக்கும்.

அவசர அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள ஒரு அறுவை சிகிச்சை நிபுணரையும் அனுப்பி வையுங்கள்.

இப்படி அத்தியாவசிய சேவைக்குழு கோரியுள்ளது. (உ-எ)

## டானியல் வாழ்க்கை சரித்திரமாக வேண்டும்
### பேராசிரியர் நந்தி உரை

பலாலி, ஜூன். 12
சமூகரீதியில் அடக்கப்பட்டு வந்த மக்களை இலக்கணமாக்கி, இலக்கியமாக்கியவர் அமரர் டானியல். டானியலின் வாழ்க்கைச் சரித்திரம் நல்ல நூலாகவேண்டும். இதுவே டானியலுக்கு அவர் இலக்கியம் படைத்த சமூக மக்கள் செய்யவேண்டிய கைமாறாகும்.

இவ்வாறு, அச்சுவேலி பத்தமேனி இளங்கதிர் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற 'டானியல்' அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய, யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத் தலைவரும், பேராசிரியரும், எழுத்தாளருமான டாக்டர் சிவஞானசுந்தரம் (நந்தி) குறிப்பிட்டார்கள்.

இக் கூட்டத்தில் திரு. ந. இராசேந்திரன், திரு. க. இராசதுரை, திரு. முத்து சிவஞானம் திரு. பா. குணராசா, திரு. மு. பொன்னுத்துரை, திரு. ஜேகேந்திரபோஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (இ-ஒ-119)

## கிளிநொச்சி: இறந்தோரில் சிலரின் விவரம்

யாழ்ப்பாணம் ஜூன் 12
கிளிநொச்சி மோதலில் இறந்த குடிமக்கள் சிலரின் பெயர் விவரங்கள் நேற்றும் கிடைத்தன.

அவை வருமாறு;

1. எஸ். வேலாயுதம் பிள்ளை, திருநகர் வாசி - கிராமசேவகர்
2. இ. சண்முகநாதன் - திருநகர் வாசி தபாற்சேவகர்
3. எஸ். இராசலிங்கம், திருநகர் வாசி- மெக்கானிக்
4. எஸ். சிவஞானம் கணேசபுரம், கிராமவங்கி முகாமையாளர்
5. எஸ். ஜெயா, திருநகர் வாசி, தபாற் சேவகர்
6. எஸ். தவராசா, திருநகர் வாசி, இரசாயனக் கூட்டுத்தாபனம்
7. எஸ். சிவா, 155 ஆம் கட்டை, மாணவன்
8. டயஸ் திருநகர், வர்த்தகர்
9. சின்னத்தம்பி, திருநகர், கமம்
10. அம்புலி, திருநகர் தொழிலாளர்
11. இன்பராசா, திருநகர், பெட்ரோலிய கூட்டுத்தாபன ஊழியர்
12. சண்முகம், கிளிநொச்சி பட்டினம்,ஹரே கிருஷ்ண உரிமையாளர் (இ-எ)

## திருநகர் மயான அமைதி

யாழ்ப்பாணம், ஜூன்12
ஜூன் மாதம் 4ஆம் திகதி தொடங்கிய கிளிநொச்சி மோதலின் காரணமாக திருநகர் கிராமத்தில் மயான அமைதி நிலவுகின்றது சுமார் 1,200 குடும்பங்களில் எட்டுக்குடும்பங்கள் மட்டுமே உடைமைகளை இழக்க விரும்பாது வீடுகளில் இருக்கின்றனர்.

இத்தகவலை கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக்குழு உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கணேசபுரம், ஆனந்தபுரம், டிப்போவீதி,உதயநகர், பரவிப்பாஞ்சான், மூன்றும் வாய்க்கால் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக வெளியேறியிருக்கின்றனர்.

1983 ஜூலைக்கலவரத்தில் அகதிகளாக வந்த மக்கள் குறுகிய கால இடைவெளிகளில் தேடிய சொத்துக்களை ஒரு நொடிப் பொழுதில் இழந்து அகதிகளாகப் பாடசாலைகளிலும் தொண்டர் நிறுவனங்களிலும் நண்பர்கள், உறவினர்களின் இல்லங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலும் காந்தி நிலையத்திலும் மக்கள் நிறைந்து காணப்படுகின்றனர்.

இப்படி அவர் சொன்னார். (இ-எ)

## ஓராண்டு நினைவஞ்சலி
### ஞானப்பிரகாசம் அருந்ததி றேஸ்மேரி



அன்னை மடியில்: 06-09-1961

இறைவனடியில்: 24-05-1985

திதி: 12-06-1986

"பெற்றவளும் பரிதவிக்க உடன்பிறப்பும் ஏங்குகின்றோம்.
எம்மவளே 'அருந்ததியே' எம்முள்ளம் வேகுதம்மா
ஆட்டுகின்ற ஆலமரும் தேவனவன் உன்னை-
அணைத்துவிட்டான் தடுப்பதற்கு எமக்கில்லை உரிமையம்மா".

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்

அம்மா, அண்ணா. அண்ணி, தங்கை. உறவினர்கள், நண்பர்கள்.

கோவிற்கடவை,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

## மக்கள் முகம்
### கணேச வித்தியாலய நிர்வாகிகள்

புங்குடுதீவு ஜூன் 12
புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்- திரு. த. துரைசிங்கம் (அதிபர்) உபதலைவர்- திரு. க பொன்னம்பலம். செயலாளர்- திரு. நா. சி. நடராசா,உபசெயலாளர்- திரு. சி. சண்முகலிங்கம், பொருளாளர்- திரு. பொ. சபாரெத்தினம். (இ-131)

### வேலணை ப.நோ.கூ. புதிய தலைவர்

ஊர்காவற்றுறை ஜூன் 12
வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக திரு. சி. சிவராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் வேலணை உப அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரான இவரது இந்த நியமனம் கூட்டுறவுத் திணைக்களத்தினால் செய்யப்பட்டுள்ளது. (இ-16)

# சுயாட்சி உள்ள பட்டினங்களை அமைத்த தமிழ் வணிகர்கள்

## 12 ஆம் நூற்றாண்டு நிலைமை குறித்துப் பேராசிரியர்

யாழ்ப்பாணம், ஜூன் 12
இலங்கையிலே பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் சுயாட்சியுரிமை கொண்டபட்டினங்களை அமைத்துக் கொள்ளும் அளவுக்கு தமிழ்வணிக கணங்கள் பலமும் செல்வாக்கும் அதிகாரமும் பெற்றிருந்தன.

பேராசிரியர். சோ செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவு யாழ் பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்றது.

வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சோ. பத்மநாதன் அதில் உரை நிகழ்த்திய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

பேராசிரியர் செல்வநாயகம் நினைவுக் குழுவும், யாழ் பல்கலைக் கழகப்புவியியற்துறையும் இணைந்து நடத்திய இவ் வைபவத்துக்குக் கலைப் பீடாதிபதி திரு. நா. பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

"மத்திய கால இலங்கையில் தமிழ்வணிக கணங்களும் பண்ணுட்டு வாணிபமும்" என்ற பொருளில் உரையாற்றிய பேராசிரியர் பத்மநாதன் தொடர்ந்து கூறியதாவது: —

இலங்கையிலே கி. பி 900 - 1250 காலப்பகுதியைச் சேர்ந்த 22 சாசனங்களிலே தமிழ் வணிகரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

இவற்றுள் மூன்று சிங்கள மொழியில் உள்ளன. ஏனைய யாவும் தமிழ்ச் சாசனங்களாகும்.

கி. பி பத்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிலே தமிழ்வணிகரின் செல்வாக்கு மிகக் கூடுதலான அளவிலே இருந்து வந்தது.

பாக்கு நீரிணை வழியான இந்திய—இலங்கை வர்த்தகம் பெரும்பாலும் தமிழக வணிகர் வசமாயிருந்தது.

வாணிபத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த பொலன்னறுவைக் கால அரசரில் சிலர் தமிழ் வணிக கணங்கள் சிலவற்றோடு நல்லுறவு கொண்டு அவற்றுக்கு ஆதரவு வழங்கியிருந்தார்கள்.

அந்நகரில் ஏற்பட்ட இந்துக் கலாசார வளர்ச்சிக்கும், ஆதரவாயிருந்தனர்.

இவ்வாறு பேராசிரியர் பத்மநாதன் கூறினார்.

கலாநிதி கா. ரூபபூர்த்தி நன்றியுரை கூறினார். (இ-9)

## ஆனையிறவில் கைதானவர் கொழும்பில் விடுதலை

பருத்தித்துறை, ஜூன் 12
ஆனையிறவு இராணுவ தடைமுகாமில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் கொழும்பில் விடுதலையானார்.

கொழும்பிலிருந்து சென்ற மாதம் 19ஆம் திகதி புலோலியிலுள்ள தனது மாமியாரைச் சந்திக்க வந்த சத்தியலிங்கம் (வயது 23) என்பவர் ஆனையிறவு தடைமுகாமில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்

அவரை விசாரித்த இராணுவத்தினர் இவர் கொட்டாஞ்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்றும் அவரது தாயார் சிங்களவர் என்றும் தகப்பனார் தமிழர் என்றும் அறிவித்தார்கள்

அவரைத் தொடர்ந்து விசாரிப்பதற்காக கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்குக் கொண்டு சென்றார்கள்.

அங்கு விசாரணை செய்த இராணுவ புலன் விசாரணைப் பிரிவினர் அவர் மீது எந்தவித குற்றச் சாட்டுகளும் இல்லாமையால் கொழும்பில் இம்மாதம் 6ஆம் திகதி விடுதலை செய்தார்கள் (இ-ஒ-109)

## அனுதாபம் தெரிவிப்பு

அண்மையில் காலஞ்சென்ற கலவான எம். பி சரத் முத்தெட்டுவேகம, அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தலைவர் திரு கா. விசுவலிங்கம் ஆகியோரின் மறைவு குறித்து பருத்தித்துறைத் தொகுதி பிரசைகள் குழு அனுதாபம் தெரிவித்துள்ளது.

குழுவின் வாராந்தக் கூட்டத்தில் அவர்களின் ஆத்மசாந்திக்காக இரண்டு நிமிட மௌனஞ்சலியும் செலுத்தப்பட்டது. (உ-எ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## மாணவரின் கல்வி பரீட்சையை மையமாகக் கொள்ளக் கூடாது
### கருத்தரங்கில் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன்.12
பாடசாலைக் கல்விக்கு பரீட்சை மையமாக இருத்தல் ஆகாது வாழ்க்கை மையமாக இருப்பது அவசியம். மாணவர்களை வாழ்க்கைக்குத் தயார் செய்யும் விதத்தில் கல்வி அமைதல் அவசியம்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் யாழ் மாவட்டகல்விப்பொருட்காட்சி தொடர்பாக கல்வித் திணைக்களம் நடத்திய கருத்தரங்கில் கல்விப் பணிப்பளர் திரு இ. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. சிவவிநாயகமூர்த்தி தலைமை வகித்தார்.

கல்வி அதிகாரிகள் அதிபர்கள் ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்.

தொழில் நுட்ப வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் பின்வருமாறு பேசினார்:-

யாழ் கல்வித்திணைக்களத்தினால் பணிப்பாளரின் திட்டத்துக்கமைய நடைபெறவுள்ள கல்விப் பொருட்காட்சி புதுமையானது.

பாடநெறி, முறைசார்ந்த, முறைசாராக் கல்வி என்று அனைத்துத் துறை தொடர்பானதாக இப்பொருட்காட்சி அமையவுள்ளது.

யாழ் மாவட்ட கல்விப் பிரச்சினைகளை பல்வேறு கோணங்களில் சித்தரிப்பதாகவும் இது அமைவது அவசியம்.

மாணவர்களின் பல்வேறு வகைப்பட்ட திறன்களை விருத்தி செய்வதாகவும் இதனை அமைப்பது அவசியம்.

இப்படி அவர் கூறினார்.—

திரு. வி. தங்கராசா, வட்டாரக்கல்வி அதிகாரிகள் திரு எஸ் நடராசா, திரு கே. கணபதிப்பிள்ளை, திரு. என். கணேசலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

அதிபர் திரு. ஞானசம்பந்தன் நன்றியுரை கூறினார். (இ-9)

## விஜய குமாரணதுங்க தலைமையில் குழு

கொழும்பு ஜூன் 12
தமிழ்நாடு சென்று தமிழர் அமைப்புக்களைச் சந்திக்க உள்ள இலங்கை இடதுசாரிக் கட்சிகளின் குழுவுக்கு இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் திரு.விஜய குமாரணதுங்க தலைமை வகித்துச் செல்லவிருக்கின்றார்.

இப்படி வோய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலி கடந்த திங்கள் இரவு அறிவித்தது.

ஜூன் நடுப்பகுதிக்குள் இடதுசாரிக் கட்சிகள் குழு தமிழக விஜயத்தை மேற்கொள்ளக்கூடும் என்றும் அமெரிக்க வானொலி மேலும் அறிவித்தது. (இ-எ)

## நாய்கள் தொல்லை

உடுப்பிட்டி, ஜூன் 12
பளை பிரசவ விடுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் பிரசவ விடுதியில் தங்கியிருக்கும்பிரசவ தாய்மார்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

## கிளிநொச்சியில் முழு அலுவலகங்களும் ஸ்தம்பித நிலையில்

யாழ்ப்பாணம், ஜூன்12
கிளிநொச்சியில்கச்சேரி அரச அலுவலகங்கள், ஆஸ்பத்திரி ஆகியவை முற்றாக ஸ்தம்பித்துள்ளன.

கிளிநொச்சி அரச அதிபர் கிளிநொச்சிக்கே வர முடியாத நிலையில் உள்ளது.

இப்படி கிளிநொச்சி அத்தியாவசியசேவைகள் குழுவின் தூதுக்கோஷ்டி ஒன்று கடந்த திங்கட்கிழமை யாழ் அரச அதிபர் திரு. வி எம். பஞ்சலிங்கத்தைச் சந்தித்து முறையிட்டது.

இத்தூதுக்கோஷ்டியில் குழுத்தலைவர் திரு மு. இராமனாதன் செயலாளர் திரு. சி. கதிரவேலு, திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை ஆகியோர் அங்கம் வகித்தார்கள்.

சந்திப்பைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் திரு பஞ்சலிங்கம் இணைப் பதிகாரியுடன் தொடர்பு கொண்டதாக, தூதுக் குழு உறுப்பினர்களில் ஒருவரான திருமதி [illegible] சொன்னார். (இ-[illegible])

## தாக்கப்பட்ட இளம் பெண் ஆஸ்பத்திரியில்

சாவகச்சேரி, ஜூன் 12
சாவகச்சேரியைச் சேர்ந்த வேம்பிராய் சந்திக்கு அண்மையில் இளம் பெண் ஒருவர் இனம் தெரியாத இரு பெண்களால் தாக்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சந்திரலதா என்னும் இப்பெண் வீட்டில் தனிமையில் இருந்த போது குடிப்பதற்குத் தண்ணீர் கேட்ட பிரஸ்தாப இரு பெண்களும் மந்துவில் செல்ல வழிகாட்டக் கேட்டனராம்

வழிகாட்டச் சென்ற போதே தாக்குதல் சம்பவம் [illegible] என்று கூறப்படுகிறது. (இ-ஒ)

## எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கொள்கையில் உறுதியாக இருந்தார்
### சரத்துக்கு அஞ்சலி

வட்டுக்கோட்டை ஜூன் 12
தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் தனித்து நின்று வலியுறுத்திய பெருமை தோழர் சரத் முத்தெட்டுவேகமவுக்கே உண்டு, அவர் மேற்கொண்ட நடைமுறைகளால் பல எதிர்ப்புக்கள் அவருக்கு ஏற்பட்டன. எனினும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தமது லட்சியத்திலிருந்து சிறிதும் வழுவாது உறுதியாக இருந்தார்.

சங்கானை பொதுசன நூலகமண்டபத்தில் தோழர் சரத் முத்தெட்டுவேகமவுக்கு நினைவு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

அதில் கருத்துரை வழங்கிய கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. எஸ். விஜயானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. எஸ். விஜயானந்தன் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

மலையக மக்களின் துன்பங்களை நேரடியாகப் பார்த்து அவர்களது கஷ்டங்களை- பிரச்சினைகளை பொதுவுடமைத் தத்துவத்தின்படிதான் தீர்க்க முடியுமென நம்பிக்கை வைத்து அதன்படி தீர்த்துவைக்க முயற்சிகள் பல எடுத்த பெருமை தோழர் சரத் முத்தெட்டுவேகமவையே சாரும்.

உரிமைப் போராட்டங்கள் முற்போக்கு உள்ளவையாக இல்லாவிட்டால் அதனால் பொது மக்களுக்கு எந்தவிதமான பயனும் கிடைக்காமல் போய்விடுமென்று அவர் தெளிவுபடுத்தினார்.

அமரர் சரத் முத்தெட்டுவேகமவின் நினைவு தமிழ் மக்களிடமிருந்து என்றுமே நீங்காது.

இப்படி அவர் கூறினார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வ. பிரதேச செயலாளர் சட்டத்தரணி திரு. சோ. தேவராசா, சமாதான நீதவான் திரு. கி. வைரமுத்து, திரு. க. திருநாவுக்கரசு, இளைப்பாறிய அதிபர் திரு. பொ. சிவகுரு. திரு. பெ. கனகரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (இ-161)

## கல்வித்துறை வீழ்ச்சி இனத்துக்கு அழிவு

மானிப்பாய், ஜூன்.12
ஆசிரியர்களை திருப்திப்படுத்தவோ, அவர்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் சலுகைகள் வழங்கி நிர்வாகம் நடத்தவோ அதிபர்கள் முயலக் கூடாது. கல்வித்துறையின் வீழ்ச்சி எமது இனத்துக்கே அழிவைத் தரும்.

மானிப்பாய் கல்வி வட்டார பாடசாலை அதிபர்கள் மத்தியில் பேசிய வட்டாரக் கல்வி அதிகாரி திரு.ச தனஞ்செயன் இவ்வாறு கூறினார்.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் திரு. தனஞ்செயன் உரையாற்றுகையில் மேலும் கூறியது:-

பரீட்சை முடிவுகள் திருப்தியாக அமையாததுக்கு மாணவர்களை மட்டும் குறை கூறக் கூடாது.

மாணவர்களுக்கு பாடத்தில் கவர்ச்சியை ஏற்படுத்தி கல்வியை புகட்ட வேண்டும்.

பாடசாலை நேரங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதில் பல கெடுதல்கள் விளைகின்றன.

அப்பாடசாலை மட்டுமல்ல, அயல் பாடசாலைகளும் இதனால் பாதிப்படைகின்றன.

ஆசிரியர்கள் சேவைக் கால பயிற்சி வகுப்புக்களில் கட்டாயம் பங்குபற்றி புதிய பாடத்திட்டத்தின் நுணுக்கங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

பரீட்சைகள் பொதுப் பரீட்சைகளாக நடைபெறுவதால் அதில் ஏதும் குழறுபடிகள் இருப்பின் பரீட்சைக் குழுவுடன் உடனடித் தொடர்பு கொள்ள வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-ஒ-90)

## வைத்திய பரிசோதனை

கரவெட்டி திருஇருதயக்கல்லூரி மாணவர்களுக்கான சுகாதார வைத்தியப் பரிசோதனை இம்மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ளது. வைத்திய அதிகாரி திரு க. லலிதகுமார் தலைமையில் கரவெட்டி ஆரம்ப சுகாதார நிலையம் இதனை நடாத்தும். (ஒ-100)

வேகமாக விற்பனையாகின்றது!
க.பொ.த (உயர்தரம்) 1986 / 87 ஆகஸ்ட் பரீட்சைக்குரியது
"வணிகமும் நிதியும்"
நடைமுறை விடயங்கள்
தொகுப்பு: தே ஜெயராமன் B.Com (Hons)
(பகுதி நேர உதவி விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)
விலை ரூபா 13/- வெளியீடு:
பட்டப்படிப்புக் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்நகரில் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறரிடத்துக் குற்றம் காணாதே. அதற்குப் பதிலாக உனது குற்றங்களையே எண்ணிப்பார்
— அன்னை சாரதாதேவி


## உதயன்

உண்மை — அஞ்சாமை — நடு நிலைமை

இல. 15 2வது ஒழுங்கை, பிள்ளையார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073. 12-06-86. ரூ.28


## கண்ணீர் அஞ்சலி

ஒரு சில நிமிட நேரங்களில் 34 மனித உயிர்கள் பறிக்கப்பட்ட சம்பவம் நினைக்க நெஞ்சை நெருடுகிறது.

அத்தனை பேரும் அப்பாவிக் கடற்றொழிலாளர். தமது ஜீவனோபாயத்துக்காகத் தொழில் செய்து கொண்டிருந்த வேளை.

காட்டுமிராண்டிகள் கூட்டம் ஒன்று வந்து இரத்த வெறியாட்டம் நடத்தி அவர்களைக் குரூரமாகக் கொன்றிருக்கிறது. மனித நேயம் இல்லாத அரக்க மனம் படைத்த பாதகர்கள் மனித உயிர் வேட்டை நடத்தி இருக்கிறார்கள்.

அவ்வாறு செய்ததில் அவர்களுக்கு ஒரு மனத்திருப்தியோ? எதற்காகவோ பழிக்குப்பழி வாங்கியதாக ஒரு மனப்பூரிப்போ? இல்லையேல் இப்படிக் கோரக் கொலை செய்திருப்பார்களா? அவர்கள் மனிதர்களாக இல்லை. மிருகங்களாக மாறியே அப்படிச் செய்திருக்கிறார்கள்.

தாங்கள் அரசாங்கத்தின் ஆட்கள். ஆயுதம் வைத்திருப்பவர்கள். தாம் செய்யும் கொலைகளுக்குத் தண்டனை எதுவும் கிடைக்காது. கொலை செய்வதற்கென்றே தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டவர்கள்.

இந்தக் காரணங்களை வைத்தும் அவர்கள் இப்படிக் கொலை வெறியாட்டம் நடத்தி இருக்கலாம்.

ஓர் அரசாங்கத்தின் கைக்கூலிகள் நாட்டுப் பிரசைகளை இவ்வாறு கொலை செய்தால் அதனை எப்படிச் சொல்வது? இன அழிப்பு என்று சொல்லாது எவ்வாறு அர்த்தம் கொள்வது?

சம்பளம், அலவன்ஸ், உயிர் பாதுகாப்புப் படி என்று பணம் பணமாக வாரி இறைத்துத் தமிழர்களைக் கொல்லுமாறு அரசாங்கம் இவர்களை அமர்த்தி இருக்கிறது என்று சொல்லாமல் எப்படிச் சொல்வது?

இது முதல் தடவையல்ல. குமுதினிப் படகில் நடந்த கோரச் சம்பவம் இன்னும் தமிழர் மனதை விட்டு அகலவில்லை.

அதே பாணியில் மற்றும் ஒரு கொலை வெறியாட்டம். அரசாங்கத்தின் கைக்கூலிகள் நடத்திய படுபாதகம். இதுவும் ஈழத் தமிழர் மனதைவிட்டு அகலாது.

சித்திரவதை செய்யப்பட்டு கொடூரமாகக் கொலையுண்ட 34 பேரும் சுதந்திரப் போராட்டத்துக்குத் தம்மைப் பலியாக்கிய தியாகிகள். ஆயுதம் ஏந்தாமலே அரக்கர் கையில் அகப்பட்டுத் தியாகிகள் ஆனார்கள்.

நேற்று யாழ்ப்பாணம் — குடாநாடு முழுவதும் அவர்களுக்காக இரத்தக் கண்ணீர் வடித்தது. துக்கம் கொண்டாடியது.

நாமும் அந்தச் சோகத்தில் மூழ்கி, தமிழ் மக்கள் சார்பில் கண்ணீர் அஞ்சலி — இறுதி அஞ்சலி செலுத்துகிறோம்.

தியாகிகள் என்றும் சாவதில்லை. 34 அப்பாவி மக்களும் செத்தும் சாகாதவர்கள். ஈழத் தமிழர் வாழ்வில் — சுதந்திரச் சரித்திரத்தில் அழியா இடம் பெற்றவர்கள். அணையாச் சுடர்கள்.

# இலங்கை அரசுக்காக தமிழகத்தில் உளவு

## சில தமிழர்கள் கைது

சென்னை, ஜூன் 11

இலங்கை அரசுக்கு உளவு பார்த்ததாகக் கூறப்படும் சில இலங்கைத் தமிழர்களை சென்னைப் பொலிஸார் கைது செய்தனர்.

விடுதலைப் போராளிகள் என்ற போர்வையில் இவர்கள் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டனராம்.

கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் இலங்கைப் பொலிஸ் அதிகாரிகளும் ஒரு பிரயாண முகவரும் இருந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய மேலதிக விவரங்களைத் தெரிவிக்க சென்னைப் பொலிஸார் மறுத்துவிட்டனர். (உ-எ)

### வெளி உலகில்

## ஆஸ்திரிய அரசியல்: ராஜினாமா தொடருகிறது

வியன்னா ஜூன் 11

ஆஸ்திரிய நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் டாக்டர் வால்ட்ஹெய்ம் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதால் இதுவரை காலமும் ஆட்சி புரிந்த சோசலிசக் கட்சிப் பிரமுகர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

கடந்த பதினறு வருடகாலம் ஆட்சி புரிந்து வந்த சோஸலிசக் கட்சி அரசாங்கத்தின் பிரதமர் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கு முகமாக தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார்.

அவரைத் தொடர்ந்து வெளிநாட்டமைச்சரும் விவசாய அமைச்சரும் தமது ராஜினாமாவை இன்று சமர்ப்பித்தனர்.

இவர்களது பதவிக் காலம் இன்னமும் இரண்டு வருடங்களுக்கு இருந்தபோதும் தமது ராஜினாமாவில் புதிய அமைச்சரவை ஒன்றை உருவாகும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர். (உ ஒ)

## கடலில் ஆர்ப்பாட்டம் துறைமுகம் முற்றுகை

### மீன்பிடி மோதலால் சிக்கல்

லிஸ்பேன், ஜூன். 11

ஸ்பானிய கடல் பிராந்தியத்துக்குள் பிரான்ஸ் மீனவர்கள் அத்துமீறிப் புகுந்து மீன் பிடிப்பதை ஆட்சேபித்து ஸ்பானிய மீனவர்கள் கடலில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதனால் பிரான்ஸின் முக்கிய துறைமுகப்பகுதியொன்று ஸ்பானியர்களின் சுமார் 350 பாரிய மீன்பிடி வள்ளங்களால் முற்றுகையிடப்பட்டது.

துறைமுக வாயிலில் நாள் பூராவும் வழி மறுப்புச் செய்த அவர்கள் இதனால் துறைமுகப் போக்குவரத்தை ஸ்தம்பிதமடையச் செய்தனர்.

இப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் பிரான்ஸ் கடல் எல்லையில் சுமார் 300 வருடங்களுக்கும் அதிகமாக ஸ்பானிய மீன்வர்கள் மீன் பிடித்து வருகின்றனர்.

ஆனால் கடந்த சில வாரங்களாக பிரான்ஸ் மீனவர்களின் நடமாட்டம் இப்பகுதியில் அதிகரித்து வந்துள்ளதால் ஆர்ப்பாட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஒ)

## ஜெகஜீவன்ராம் இந்திரா காங்கிரஸில் மீண்டும் சேருவார்?

புதுடில்லி, ஜூன் 11

இந்திரா காங்கிரஸ் கட்சியில் திரு ஜெகஜீவன்ராம் மீண்டும் சேரவிருக்கின்றார்.

இப்படி புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

திரு ஜெகஜீவன்ராம் அண்மையில் 81 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்

அவரது பிறந்த தினத்தன்று பிரதமர் ராஜீவ் காந்தி வீடு சென்று வாழ்த்துக் கூறினார்

திரு ஜெகஜீவன்ராம் மீண்டும் இந்திரா காங்கிரஸில் சேரவிருப்பதை பிரதமரின் இச் செய்கை மேலும் உறுதிப்படுத்தி உள்ளது என்று கூறப்படுகிறது.

திரு. ஜெகஜீவன்ராம் கருத்து வேறுபாடு காரணமாக காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி போட்டிக காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தார் அதன் பின்னர் ஜனதா அரசாங்கத்தில் முக்கிய அமைச்சர் பதவியையும் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

### கடத்தப்பட்டவர்கள் விடுதலை

மெனகுவா, ஜூன்11

கடத்திச்செல்லப்பட்டு தடுப்புகாவலில் வைக்கப்பட்டிருந்த மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த தொண்டுசெய்யும் ஊழியர்கள் எட்டுப்பேரையும் பயங்கரவாதிகள் விடுதலை செய்துள்ளனர் (உ-ஒ)

## விமான விபத்து 19 பேர் பலி!

### கெய்ரோவிற்கு அருகில்சம்பவம்

கெய்ரோ, ஜூன்11

எகிப்தின் தலைநகரான கெய்ரோவிற்கு அண்மையில் நடந்த பயங்கர விமான விபத்தில் 19பேர் பலியானார்கள்.

உள்ளூர் சேவையில் ஈடுபட்ட இந்தச் சிறிய விமானம் போர்ட் அலெக்சான்ரியாவிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு கெய்ரோவை நோக்கிவந்தது.

கெய்ரோ விமான நிலையத்தில் இறங்குவதற்கு முயற்சித்த பொழுது விமானம் தவறுதலாக மின் கம்பத்துடன் மோதி வெடித்தது. இதனால் 19 பேர் பலியானார்கள். மேலும் சிலர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள் (உ. ஒ)

### சுங்கவரி குறைப்பு

புதுடில்லி, ஜூன் 11

இந்தியாவில் பள்ளிக் கூடங்களில் பாவிக்கப்படுவதற்காக இறக்குமதி செய்யப்படும் கம்பியூட்டர் சாதனங்களுக்கும் சுங்கவரி குறைக்கப்படவுள்ளது.

இதனால் சுமார் 2,000 பள்ளிக் கூடங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது (உ-எ)

### ராஜ்யசபைக்கு பிரதிநிதிகள் தெரிவு

புதுடில்லி. ஜூன் 11

ராஜ்ய சபையில் காலியாகும் 47 இடங்களுக்குப் புதிய உறுப்பினர்கள் ஜூன் 28 இல் தெரிவு செய்யப்படுவர்.

ஏழு மாநில சட்டசபைகள் இவர்களைத் தெரிவு செய்யும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படும் உறுப்பினர் பதவிக்கே இத்தெரிவு செய்யப்படும்.

தெரிவு செய்யப்படும் உறுப்பினர் தொகை விவரம் மாநில ரீதியாக வருமாறு:

| | |
|---|---|
| உத்தரப் பிரதேசம் | -12 |
| பீகார் | -7 |
| மகாராஷ்டிரம் | -6 |
| தமிழ் நாடு | -6 |
| மத்தியப் பிரதேசம் | -5 |
| ராஜஸ்தான் | -4 |
| ஒரிஸ்ஸா | -3 |
| பஞ்சாப் | -2 |
| ஹரியாணு | -2 |

(உ-எ)

### ஹரியாணு முதலமைச்சர் நம்பிக்கை

சண்டிகார், ஜூன் 11

பஞ்சாப்புக்கு முழுமையாக வழங்கப்படும் சண்டிகாருக்குப் பதிலாக போதுமான அளவு பிரதேசங்கள் ஹரியாணு மாநிலத்துடன் சேர்க்கப்படும் என்று ஹரியாணு மாநில முதலமைச்சர் பன்சிலால் கடந்த புதன் கிழமை நம்பிக்கை தெரிவித்தார்.

சண்டிகாரில் வைத்து செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முதலமைச்சர் பன்சிலால் இத் தகவலை வெளியிட்டார். (உ-எ)

### கொலை முயற்சி குற்றச்சாட்டு

லண்டன், ஜூன்11

பிறிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தாட்சரை 1984 இல் கொலைசெய்ய முயற்சி செய்த சம்பவம் தொடர்பாக ஐரிஷ் இளைஞர் ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஹோட்டல் ஒன்றில் அமைச்சர்களுடன் தங்கி இருக்கையில் இக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. (உ-எ)

## வடக்கிற்கு துருப்புகள்: காங்கேசன் மூலம் வந்தனர்

காங்கேசன்துறை, ஜூன் 12

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கப்பல் மூலமாக கடந்த செவ்வாய்க்கிழமை பெருந்தொகையான படைவீரர்கள் கொண்டு வரப்பட்டனர்.

வடபகுதியில் கடமை புரிந்த படைவீரர்கள் கடந்த சில தினங்களாக கப்பல்கள் மூலம் கொழும்பு திரும்பியதையடுத்தே அவர்களது இடங்களுக்கு புதிய வீரர்கள் வந்து சேர்ந்துள்ளனர்.

கப்பலில் வந்த பெருந்தொகையான படைவீரர்கள் காங்கேசன்துறை இராணுவ முகாமிற்கு முதலில் சென்றடைந்தனர்.

பின்னர் நேற்றுக் காலை 6-30 மணியளவில் அதிவேகமாக சில வாகனங்கள் காங்கேசன்துறையிலிருந்து பலாலி நோக்கி சென்றதாகவும் அதில் புதிய படைவீரர்கள் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் நேற்று அதிகாலை கடற்படை படகுகள் மூலம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை முகாம்களுக்கு மேற்படி புதிய படைவீரர்களில் ஒரு பகுதியினர் கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர்களுடன் முகாமுக்கு தேவையான பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (உ-68)


### பொய்யாமொழி

குறள்:

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

பொருள்:

அருளை விரும்பி அறநெறியில் நின்றவன் பிறனுடைய பொருளை விரும்பிப் பொல்லாத குற்றங்களை எண்ணினால் கெடுவான்



## வயாவிளான் சேதம் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை

பலாலி, ஜூன்.12

வயாவிளானில்அமைக்கப்பட்டமினி முகாமைச் சூழவுள்ள பகுதியில் சேதப்படுத்தப்பட்ட அழிக்கப்பட்ட வீடுகளுக்கான நஷ்டஈட்டுக்கான மதிப்பீடு நடந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் அதே வேளையிலும் புதிதாகவும் வீடுகள் பற்றி எரிகின்றன.

அழிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட வீட்டுரிமையாளர்கள் யாழ் அரசாங்க அதிபருடன் உடனடியாகத்தொடர்பு கொண்டு தமது வீடுகளுக்கான 'நஷ்டஈட்டை' அரசிடமிருந்து பெற்றுக் தருமாறு வேண்டினர்.

அரசாங்க அதிபர் 'றேபியா' வுடன் தொடர்பு கொண்டார்.

இவ் அழிவுகள் பற்றிய விவர அறிக்கை பாதுகாப்புப் பகுதியில் இருந்து கிடைத்ததும் நஷ்டஈடு வழங்குவது பற்றி முடிவெடுக்கப்படுமென 'றேபியா' அரச அதிபருக்கு அறிவித்துள்ளதாகத் தெரிகின்றது.

பாதிக்கப்பட்ட— அழிக்கப்பட்ட வீட்டு விவரங்களை அப்பகுதிப் பிரசைகள் குழு சேகரிக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளது. (ஒ-119)

## சீரிய எண்ணங்களால் வழிபாடு சிறப்படையும்

### கரவையில் சமயச்சொற்பொழிவு

கரவெட்டி ஜூன் 12

உயர்ந்த சீரிய எண்ணங்கள் மனத்தில் புகுமானல் அந்த வழிபாட்டில் மேன்மை உண்டு;

கரவெட்டி நுணுவில் குளக்கோட்டு பிள்ளையார் கோவில் உற்சவம் சமீபத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா சொற்பொழிவு நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

ஆலய வழிபாட்டின் போது கர்ப்பக்கிருகத்தில் உறையும் மூல மூர்த்தியின் சிறப்பையும் புகழையும் பேசி சிந்தித்து வருதல் மூலம் மக்கள் உய்வு பெறுகிறார்கள்.

இவற்றைவிட்டு திருவிழா என்ற காரணத்தால் ஆபாசமான பாட்டுக்கள்; படங்கள் இவைகளை நடத்தியதால் தான் இன்று எம் இனம் மிகுந்த அல்லல் படுகின்றது'

இப்படி அவர் கூறினர். (இ.ஒ-70)

பலாலி

## மின் மாற்றியை இடம் மாற்றக் கோரிக்கை

### திருத்த வேலைக்குச் செல்ல அச்சம்

பலாலி, ஜூன் 12

பலாலி விமான நிலையத்திற்கும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கும் அண்மையில் உள்ள மின்மாற்றியை (ரான்ஸ்போமர்) ஒட்டகப்புலம், அல்லது வேறு பாதுகாப்பான பகுதிக்கு இடம் மாற்றவும்.

யாழ். அரசாங்க அதிபரை வயாவிளான் பிரசைகள் குழு மேற்கண்டவாறு வேண்டியுள்ளது.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள மின் மாற்றி பழுதடைந்திருப்பதால் அதைத் திருத்த மாவட்ட சபையின் மயிலிட்டி உப அலுவலக மின் ஊழியர்கள் அங்கு செல்ல அஞ்சுகின்றனர்.

இந்நிலையில் வயாவிளான் பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

அப்பகுதி இராணுவத்தினது கண்காணிப்புப் பகுதியாக இருப்பதால் அடிக்கடி ஹெலிக்கொப்டர்கள் ரோந்து புரிந்து தாக்குதல்களை நடத்துகின்றன.

இந்நிலையில் ஊழியர்கள் திருத்த வேலைக்காக அப்பகுதிகளுக்குச் செல்ல அஞ்சுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-119)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 12

விடுதலைப் போராளி வாசன் பற்றி அருண் பிரசாத் எழுதிய "செம்பாட்டு மண்ணில் ஓர் செந்தமிழ் வேங்கை" என்ற நூல் வெளியீட்டு விழாவும்,

ஈழத்தின் முன்னணி இசைக் கலைஞர்கள் ஒன்றிணைந்து அளிக்கும் வாசன் பற்றிய ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவும் மனிதனும் மிருகமும் என்றநாடக நிகழ்ச்சியும் இன்று புதன் கிழமை மாலை 5 மணிக்கு ஏழாலை முத்தமிழ் மன்ற அரங்கில் இடம்பெறும்.

## கிளிநொச்சி அகதிகளுக்கு தொண்டர் நிறுவனங்கள் உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 12

கிளிநொச்சி அகதிகளுக்கு உதவ பல தொண்டர் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக்குழு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த உதவிகள் கிடைத்துள்ளன.

13 400 ரூபா பெறுமதியான அரிசி,மா,சீனி, பருப்பு, தேயிலை ஆகிய பொருள்களை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அளித்தது.

சற்றர்டே ரிவியூ காரியாலயம் 10 000 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களையும், தமிழ்ச் சங்கம் 10,000 ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும் வழங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

25,000 ரூபா பெறுமதியான மருந்து வகைகள், பால்மா முதலியவற்றை சர்வோதய இயக்கம் அகதி முகாம்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இத் தகவல்களை கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழு பிரமுகரான திருமதி. செல்வராணி சோமசேகரம்பிள்ளை தெரிவித்தார். (உ-எ)

## பருத்தித்துறை பிரசைகள் குழு விரிவுபடுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன்.12

பருத்தித்துறைப் பிரசைகள் குழு, பருத்தித்துறை தொகுதிக்கான மத்திய பிரசைகள் குழுவாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது

நடப்பாண்டுக்கான புதிய அலுவலர் தெரிவுடன் இந்த மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது

சுண்டிக்குளம் முதல் பொலிகண்டி வரையான கிராமசேவகர் பிரிவு, கிராமசபை வட்டாரப் பிரிவு, நகரசபை வட்டாரப்பிரிவு ரீதியாகப் பிரசைகள் குழுவின் [illegible] டுள்ளன. இப்படி மொத்[illegible] குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரசைகள் குழுவில் கூட்டுறவுச் சங்கங்கள், அகதிகள் புனர்வாழ்வுச் சபை, ஆரம்ப சுகாதார நிலைய ஒன்றியம், போக்குவரத்துச் சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், மருத்துவமனை, அபிவிருத்திச்சபை முதலான சேவை நிறுவனங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது

குழுவின் பணிமனையில் சனிக்கிழமை தோறும் காலை 10 மணிக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இணக்க சபைகளும் இதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அபிவிருத்தி வேலைகளை மேற்பார்வை செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-ஒ)

### சிவநெறிக்கழக போட்டிகள்

யாழ்ப்பாணம் ஜூன் 12

கீரிமலை சிவநெறிக்கழகம் வருடாந்தம் நடத்தி வரும் பல போட்டிகளை வழமைபோல் இம்முறையும் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

புராணபடனம், நீதிச் செய்யுள் மனனம், கதாப் பிரசங்கம் என மூன்று பிரிவுகளாக இம்முறை இப் போட்டிகள் இடம் பெறும்

மனனப்போட்டி விண்ணப்பங்கள் ஜூன் 21 ஆம் திகதி வரையும் ஏனையவை ஜூன் 28 ஆம் திகதி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும் என செயலாளர் திரு. எஸ். விநாயகரத்தினம் தெரிவித்தார். (இ-ஒ)

### குருத்துவ நிலை

யாழ்ப்பாணம் ஜூன் 12

யாழ். புனித அன்னம்மாள் ஆலயத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமைகாலை9மணிக்கு யாழ். ஆண்டகை கலாநிதி பி. தியோகுப்பிள்ளையினால் ரூபன் மரியாம்பிள்ளைக்கு குருத்துவ நிலைப்படுத்தல் நிகழ்த்தப்படும்.

பின்னர் வண. ரூபன் மரியாம்பிள்ளையின் முதலாவது திருப்பலிப்பூஜை அவரின் பிறந்தவூரான சில்லாலையிலுள்ள புனித கதிரைமாதாஆலயத்தில் 24 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நிறைவேற்றப்படும். (இ-ஒ)

### நவாலியில் உலக சூழல் தினம்

யாழ்ப்பாணம் ஜூன் 12

நவாலி மகா வித்தியாலயத்தில் உலக சூழல் தினம் வித்தியாலய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பியின் தலைமையில் நடைபெற்றது.

மானிப்பாய் புனித ஆன்ஸ் வித்தியாலய ஆசிரியை திருமதி றெஜினு இருதையநாதன் சிறப்பு பேச்சாளராக கலந்து உலக சூழல்தினத்தின் முக்கியத்துவத்தையும் சூழல் மாசுறுவதால் ஏற்படும் விளைவுகளையும் விளக்கினர்.

வித்தியாலய அதிபரின் வேண்டுகோளுக் கிணங்க மாணவர்கள் சூழல் தின ஞபகார்த்தமாகப் பாடசாலை வளவில் மரங்களை நட்டனர். (இ-ஒ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வைபவங்கள் இனிக்க
'ஸ்ரீ' ஐஸ்கிறீம்
பரிமாறுங்கள்
வசதியான 80 ml பிளாஸ்ரிக் 'கப்' களில்
ரூ 3-50 மட்டுமே
Also available:
FAMILY BLOCKS, GALLONS
dyn ads marketing
476, Main Street, CHUNDIKULI
(Opposite St. John's College)

உதயன்

12 — 06 — 1986 வியாழக்கிழமை

DELICIOUS AmL ICECREAM
MARKETED BY DYN ADS MARKETING

## என்னதான் முடிவு நாட்டியம் விழிப்புணர்வு ஏற்படுத்தியது

யாழ்ப்பாணம், ஜூன் 12

தமிழ் மக்களுக்கு என்னதான் முடிவோ என அங்கலாய்த்து இருக்கும் இவ்வேளையில் அதற்குப் பொருத்தமாக என்னதான் முடிவு என்ற நாட்டியத்தை கலைஞர் வேல் ஆனந்தன் தந்துள்ளார்.

நடந்தவற்றை, நடப்பவற்றை, நடக்கவிருப்பவற்றை உணர்ச்சிவசமாக உள்ளத்தைத் தொடும் வகையில் இப்படைப்பு தந்திருக்கின்றது.

திருநெல்வேலி கலைக் கோவில் நாட்டிய நிறுவனத்தின் என்னதான் முடிவு? நாட்டியத்தின் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்து உரையாற்றிய நடிகமணி வி. வி. வைரமுத்து இவ்வாறு குறிப்பிட்டார். கண்டிக்குளி மகளிர் கந்லூரி மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடந்தது.

யாழ் மன்ற மாவட்ட ஆயர் கலாநிதி இயோகுப்பிள்ளை ஆசியுரையாற்றுகையில்:—

பாரம்பரிய கலைகளை மறக்காமல் வளர்க்கப் பாடுபடவேண்டும் என்றார்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் சிறப்புரை நிகழ்த்தினார்.

என்னதான் முடிவு ஆவலுடன் எல்லோராலும் எதிர்பார்க்கப்படுவது கலை ரசிகர்கள் வேல் ஆனந்தனை நோக்குகின்றார்கள். மற்றவர்கள் யாரை நோவதென்று தெரியாமல் தவிக்கின்றார்கள்.

வருங்காலசந்ததிக்கு— சோர்வுற்ற சமூகத்திற்கு வேல் ஆனந்தவினது என்னதான் முடிவு நாட்டியம் விழிப்புணர்வு ஏற்படுத்தி எதையும் தாங்கும் இதயத்துடன் வாழ வழிகாட்டும் என்றார்.

# கிராமிய வங்கி மூலமாக பென்ஷன்

## யாழ். அரச அதிபர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். கோட்டை வங்கி அஞ்சல் அலுவலகம் ஆகியவை மூலம் பென்ஷன் பெறுவோருக்கு அவரவர் வசிக்கும் பகுதிகளில் உள்ள கிராமியவங்கி மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் பென்ஷன் வழங்க யாழ்ப்பாணம் அரசஅதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

விரும்பிய கிராமவங்கி, மக்கள் வங்கிக் கிளைகளில் சேமிப்புக்கணக்கு, நடைமுறைக் கணக்குகளை ஆரம்பித்துவிட்டு அறிவித்தால் அவ்வங்கிகள் மூலம் பென்ஷன் கிடைக்க நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்று யாழ். அரச அதிபர் அறிவித்திருக்கின்றார்.

"இந்தநடை முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பாதுகாப்புப் படையினரின் பகுதிக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

பென்ஷன் பெறுவோர் சங்க உறுப்பினர்களை இது சம்பந்தமாக நேற்று சந்தித்துப்பேசினேன்"— இப்படி யாழ். அரச அதிபர் இது சம்பந்தமாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(உ-எ)

### வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் செவ்வாய்க் கிழமை ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று பிற்பகலுடன் ஒத்திவைக்கப் பட்டது.

சென்ற மாதம் 21ஆம் திகதி இரவு நடைபெற்ற பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் மீதான தாக்குதல் முயற்சி சம்பந்தமாகவே மேற்படி வேலைநிறுத்தம் நடைபெற்றது.

உபவேந்தருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளையடுத்தே வேலை நிறுத்தம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டதாக பல்கலைக் கழக ஊழியர் சங்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

(உ-5)

மண்டைதீவு • கொலைகளைக் கண்டித்து

## யாழ். சட்டத்தரணிகள் நீதிமன்றப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

மண்டைதீவுப் படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்து யாழ். சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று யாழ் நீதிமன்றங்களில் வழக்குகள் எதுவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நேற்று விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்ட வழக்குகள் அனைத்தும் நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே ஜூன் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

(உ-எ)

## நடுக் கடலில் கைதான 34 தமிழரும் இன்று சுங்க திணைக்களத்திடம்

### உறவினர் உடன் தொடர்பு கொள்க.

யாழ்ப்பாணம் ஜூன் 12

ஏப்பிரல் மாத நடுப்பகுதியில் இலங்கையில் இருந்து அகதிகளாகப் படகில் இந்தியா சென்றுகொண்டிருந்தபோது கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்ட 34 பேரும் மேல் விசாரணைக்காகச் சுங்கத் திணைக்களத்திடம் இன்று ஒப்படைக்கப்பட உள்ளனர்.

இவர்களின் உறவினர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி சுங்கத் திணைக்கள உயர் அதிகாரி வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

கடற் படையினரால் கைதுசெய்யப்பட்ட இம்முப்பத்து நான்கு பேரும் பலாலி இராணுவ முகாமிடம் ஒப்படைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் விசாரணை செய்யப்பட்டனர். விசாரணை முடிந்ததால் அவர்கள் அனைவரும் அனேகமாக இன்று சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுவர்.

சுங்கத் திணைக்களத்திடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் சுங்கத் திணைக்களம் தனது விசாரணைகளை நடத்தும்.

(உ-9)

# திருகோணமலையில் 12 மணிநேர ஊரடங்கு

திருகோணமலை ஜூன் 12

பஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து திருகோணமலை நகரத்தில் நேற்று மாலை 5 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது.

இன்று காலை 5 மணியுடன் ஊரடங்குச்சட்டம் விலக்கிக் கொள்ளப்படும் என்றும் அரசாங்கம் நேற்று அறிவித்தது.

குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிய செய்தி கிடைத்ததும், திருமலை நகர வீதிகள் வெறிச்சோடின. மக்கள் பயத்துடன் வீடுகளுக்குள் பதுங்கினர்.

நகருக்குச் செல்லும் எல்லா வீதிகளும் மூடப்பட்டு விட்டதாகவும் ஆயுதப்படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகவும் இந்திய வானொலி தனது இரவு செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

திருமலை நகரின் சகல நடவடிக்கைகளுமே முற்றாக ஸ்தம்பிதமடைந்த நிலையில் நேற்று இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## உயிரிழந்தவர்களுக்கு ரூ. 15 ஆயிரம் உடன் நிதிஉதவி

### சங்கம் ஒன்றின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஜூன் 12

மண்டைதீவுப் படுகொலையில் உயிரிழந்த குருநகர் வாசிகளின் குடும்பங்களுக்கு பதினையாயிரம் ரூபா நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்துள்ளது.

திட்டம் அங்குரார்ப்பணஞ் செய்த நேற்றைய தினமே சில நிமிடங்களில் 8.750 ரூபா சேர்ந்தது.

குருநகர் மீனவர் மண்டைதீவுக் கடற்கரையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

சங்க மண்டபத்தில் நடந்த இக் கூட்டத்துக்கு தலைவர் வண. பிதா. பிரான்ஸிஸ் யோசப் தலைமை வகித்தார்.

உயிரிழந்தவர்களுக்கு இரண்டுநிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்வரும் தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது:-

அரச பயங்கரவாதத்தின் வடிவமான இக்குரூரக் கொலைகளை சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நிராயுத பாணிகளான அப்பாவி மீனவர்கள் வாழ்க்கைக்கஷ்டங்களைப் போக்குமுகமாக கரையோரப் பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்ற சமயம் மிருகத்தனமான முறையில் கொல்லப்பட்டனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்குப் பதிலாக தமிழ் மக்களை அழித்து ஒழிக்கும் இனப்படுகொலையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்பதையே இப்படுகொலை எமக்குப் புலப்படுத்துகின்றது.

இப்படி தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

(உ-எ)

## மண்டைதீவில் கொலையுண்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

தேவாலய மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த சடலங்களையும் பல்லாயிரக் கணக்கான மக்கள் சூழ நின்று அழுத கண்களுடன் குழறியபடி கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

தேவாலயத்தில் மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கும்போது கோட்டைப் பக்கத்தில் இருந்து துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

நண்பகல் சுமார் ஒரு மணியளவில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப் பட்டது.

இரண்டு முப்பது மணியளவில் பூதவுடல்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டிகள் இரண்டு இரண்டாக பதினைந்து வாகனங்களில் ஏற்றப்பட்டு பிரதான வீதியூடாக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கத்தோலிக்க குருமார்கள் முன்னே செல்லஅதனைத் தொடர்ந்து சென் ஜேம்ஸ் பாடசாலை மாணவர்கள் மலர்வளையங்களைக் கொண்டுசென்றனர்.

இதனையடுத்து பூதவுடல்களை சுமந்த வாகனங்களும் வேறுபல வாகனங்களும் அணி அணியாக இறுதி ஊர்வலத்தில் சென்றன.

மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மக்கள் விடுதலைப்படையைச் சேர்ந்த ரமேஸ் (30 வயது) தவம் (31வயது)ஆகிய இரண்டு போராளிகளினது பூதவுடல்களும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப் பட்டன.

அவர்களது பூதவுடல்களைக்கொண்ட இரண்டு பெட்டிகளும் தனியான வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு, செங்கம்பளங்களால் மூடப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டன.

பிற்பகல் சுமார் 4.30 மணியளவில் சேமக்காலையை பிரேத வாகனங்கள் அடைந்ததும் ஒவ்வொரு பெட்டியாக இறக்கப்பட்டு அங்கு வெட்டப்பட்டிருந்த பெரிய கிடங்கிற்குள் அடுக்கப்பட்டு மலர்வளையங்கள் சாத்தப்பட்டன.

இறந்த மக்கள் விடுதலைப்படை அங்கத்தவர்களுக்கு மரியாதை வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

கூடி நின்ற பல்லாயிரக் கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் கதறிஅழ கிடங்கு மூடப்பட்டது.

பொது ஸ்தாபனங்கள் அரச திணைக்களங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பொது மக்களும் பெருந்தொகையாக இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

(உ - 10 - 6)

## பருத்தித்துறையில் பீரங்கி, ஹெலி தாக்குதல் வள்ளம் தீப்பற்றி எரிந்தது

பருத்தித்துறை, ஜூன் 12

பருத்தித்துறைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியிலிருந்து 6.15 வரை கடற்படையினரின் பீரங்கி, ஹெலி தாக்குதல்கள் இடம் பெற்றன.

பருத்தித்துறை கற்கோவளம் கடற்கரைப் பகுதியில் கரையோரமாகச் சென்ற வள்ளத்தை நோக்கி கடற்படைப் பீரங்கிக் கப்பல் வேட்டுக்களைத் தீர்த்தது.

இதற்கிடையில் வள்ளத்தில் வந்தவர்கள் வள்ளத்தைக் கரையில் ஏற்றி விட்டார்கள். அதனைத் தொடர்ந்து வந்த ஹெலிக்கொப்டர் சுமார் ஒரு மணி நேரமாக வராத்துப்பளை, நெல்லண்டை, கற்கோவளம் ஆகிய பகுதிகளை வட்டமிட்டுத் தொடர்ச்சியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தது.

கற்கோவளம் கடற்கரையோரத்தில் அநாதரவாகக் கைவிடப்பட்டிருந்த வள்ளத்தை நோக்கிச் சுட்டதில் வள்ளம் தீப்பற்றி எரிந்து சாம்பலாயிற்று. மேலும் கடற்கரைப் பகுதியிலிருந்த பல வள்ளங்கள் சிறு சேதமுற்றன.

வள்ளத்தில் பிரயாணம் செய்தவர்களுக்கும் அவர்களது உடைமைகளுக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என நம்பகரமாகத் தெரிகிறது.

(உ - 118)

### பணிப்பாளருக்கு கௌரவம்

வட்டுக்கோட்டை

ஜூன் 12

யாழ் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற வட மாநிலக் கல்வி அதிபதி திரு. இரா. சுந்தரலிங்கத்தை கௌரவிக்கும் முகமாக இன்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் மதியபோசன விருந்து அளிக்கப்படவுள்ளது.

கல்லூரியில் இன்று நடைபெறும் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியிலும் அவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

இவ்வைபவங்கள் கல்லூரிஅதிபர் திரு. க. அருணாசலம் தலைமையில் நடைபெறும்.

(உ-161)

## காவலூரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யது

நேற்றைய முன்தினம் மாலை காரைநகர் கடற்படை முகாமிலிருந்து பல சிப்பாய்கள் சில ரோந்துப்படகுகளில் ஊர்காவற்றுறை நோக்கி வந்தனர் என்றும்,

அப்போது போராளிகள் அவர்களைத் தாக்கியதில் படையினர் இருவர் இறந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இத்தாக்குதல் நடைபெற்றதையடுத்தே சிப்பாய்கள் முகாமிற்குத் திரும்பிச் சென்று அங்கிருந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

(உ-167-16)

## மத்தியஸ்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மூன்று நாட்களில் நான்கு தடவைகள் சந்தித்துப் பேசினார் என்பது தெரிந்ததே.

திரு. டிக்ஸிற் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக தமது பதிலை தாம் புதுடில்லிக்கு உடனடியாக அனுப்பி வைப்பதாக திரு. ஜெயவர்த்தன சொன்னார்.

(அ-எ)

## குடாநாட்டில்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்யப்பட்டிருந்தது.

தற்போது ஏரிகளிலும் மீன்பிடிப்பது தடைசெய்யப்பட்டிருப்பதால் குடாநாட்டில் கடலில் மீன் பிடிப்பது முற்றாகத்தடைசெய்யப்பட்டிருக்கிறது.

இதனால் மீனவர் எவரும் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லவேண்டாம் என அரச அதிபர் கேட்டிருக்கிறார்.

(உ-எ-10)

## மண்டைதீவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் வருமாறு:—

1. அன்ரன் மோகன் (21 வயது)
2. சின்னத்துரை சிவா (18 வயது).
3. நாகமணி அலன்ரேஸ் (18 வயது)
4. செல்லையா கருணாநிதி (24 வயது)
5. எஸ். இரத்தினசிங்கம் (22வயது)
6. கணபதி கண்ணதாசன் (24 வயது)

கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் இதுகுறித்து யாழ். அரச அதிபரிடம் முறையிட்டனர்.

கைதாகி யாழ். கோட்டை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை அவர்களது பெற்றோர்கள் நாளை வெள்ளிக்கிழமை சென்று பார்ப்பதற்கு அரச அதிபர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

(உ-167)

# வல்வை: மும்முனைத்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தினர்.

இரண்டு பிளாஸ்ரிக் படகுகள் கடும் தாக்குதலுக்கு உள்ளானதாகவும்—

அவற்றில் ஒன்று மூழ்கடிக்கப் பட்டதாகவும்— மற்றையது சேதமுற்றதாகவும் கூறப்படுகிறது.

படகில் வந்தவர்களுக்கு படுகாயம் அல்லது உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனச் சொல்லப்பட்டது

இதனையடுத்து கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வல்வை கரையிலிருந்து இரண்டரை மைல் தொலைவில் உள்ள கம்பர் மலைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த பீரங்கிக் குண்டுகளினால் 6 வீடுகள் எரிந்து சாம்பராயின.

இதேசமயம் வல்வைப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரண்டுபொம்மர்கள் அடுத்தடுத்து குண்டுகளைப் பொழிந்து தள்ளின.

இதனால் பத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன.

மூவர் அந்த இடத்திலேயே பலியாகினர். மற்றொருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் உயிரிழந்தார். பலர் படுகாயமடைந்தனர்.

பீரங்கித் தாக்குதல் பொம்பர் குண்டு வீச்சு ஆகியவற்றிற்கு மத்தியில் முகாமிலிருந்து ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன.

உடுப்பிட்டி, வல்வெட்டி, தொண்டமானாறு, கம்பர்மலை, வல்லைவெளி, பொலிகண்டி, திக்கம், கரவெட்டி ஆகிய இடங்களில் பல ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இந்தத்தாக்குதலினால் எழுந்த சத்தங்கள் சாவகச்சேரி, வறணி ஆகிய பகுதிகளிலும் கேட்டதாக கூறப்படுகிறது.

பிரசித்தி பெற்ற வல்வை சிவன் ஆலயத்திலும் ஷெல் வீழ்ந்து வெடித்தது.

வசந்த மண்டபம் முற்றாகச் சேதமடைந்தது.

அங்கு தஞ்சம் புகுந்திருந்த 25க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அவர்கள் பின்னர் மந்திகை, யாழ் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தோரில் சிலரின் விவரம் வருமாறு:-

எஸ். யோகராஜா, (வயது 52) பிரசன்னா (வயது 5), ராஜ்குமார் (வயது 8), சகுந்தலாதேவி (வயது 13), சிவயோகம் (வயது 62) — ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

பொன்னி (வயது 60) நாகேஸ்வரி (வயது 18) ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பொன்னியின் மகளான இளம் யுவதி இத்தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

சிவானந்தவேல் (55) பாலசுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை (59), வி. வனிதா (18), ரீ கமலாம்பிகை (18), சீ. சித்திரலேகா (36), கீதா (7), பாலேஸ்வரி (14), இந்திராதேவி (21), மாணிக்கம் (46)

சரஸ்வதி (65), திருமதி இராசதுரை (72), பிரேம்குமார் (32), சுகுமார் (26), நற்குணனந்தவேல் (30) ஆர். மோகனதாஸ் (30)

இவர்கள் அனைவரும் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள்

இந்தத் தாக்குதல் சம்பவங்களை அடுத்து இப்பகுதி மக்கள் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்

(உ-70-119-118-10)

## யாழ் நகர-

1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது வீடுகளில் இருந்து அழுகுரல் காற்றோடு கலந்திருந்தது.

கணவனை இழந்த மனைவி, அப்பாவை இழந்த பிள்ளை, பிள்ளையை இழந்த தகப்பன் தாய்மார் சகோதரர், தோழர்களை இழந்தவர்கள் இப்படி எத்தனை எல்லோரும் கத்திக் குழறிக் கதறி அழுதகாட்சி நெஞ்சை உருகவைத்தது.

யாழ் நகரமெங்கும் ஒலிபெருக்கிமூலம் சோககீதங்கள் ஒலிபரப்பப் பட்டன.

மக்கள் வீதிகளில் கறுப்புப்பட்டி அணிந்து நடமாடினர்.

(உ—10)

## 50 பேர்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அனுராதபுரம், கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

காயமடைந்தவர்கள் சிலர் திருகோணமலை ஆஸ்பத்திரிக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் குறைந்தது 70 பயணிகள் வரையில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன.

ஆனால் இலங்கை வானொலி நேற்று மாலைச் செய்தியில், 22 பயணிகளே உயிரிழந்தனர் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும் அறிவித்தது (அ-உ-எ)

## சுட்டுக்கொலை

ஏதென்ஸ், ஜூன் 11

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் காலீப் நாஸர் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இருவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்

## நிறம் மாறும் சீருடைகள்

ஊர்காவற்றுறை, ஜூன் 12

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சேவை ஊழியர்களுக்கான இவ்வாண்டுக்குரிய சீருடைகளை வழங்கும்படி யாழ் மாவட்ட செயலாளர் சுற்றறிக்கை மூலம் பணித்துள்ளார்

அபிவிருத்திச்சபை உ. அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள இச்சுற்றறிக்கையில் இதுவரை காலமும் காக்கி நிறத்தில் வழங்கப்பட்டு வந்த சீருடைகள் இனி மேல் சாம்பல் நிறத்தில் வழங்கப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து உள்ளூராட்சி அமைச்சினால் கேட்டுக்கொள்ளப்பட்டவண்ணம் இந்நிற மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் தனது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஓ-16)

## முதலுதவி பயிற்சி வகுப்புகள்

பருத்தித்துறை, ஜூ12

தென் பலோலியில் இயங்கிவரும் தையற் பயிற்சி நிலயத்தில் முதலுதவிப் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் சுமார் 50 யுவதிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

(ஓ-109)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 12—6—1986
Printed aod Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number Q J 60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org